தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, பிப்ரவரி 23, வியாழக்கிழமை.

மாசி 11, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.''

உருண்டு செல்லத்தக்க பெரிய தேருக்கு அதன் அச்சில் இருந்து அதனைத் தாங்கும் சிறிய ஆணியைப் போன்ற திண்ணியாரைப் இவ்வுலகம் பெற்றிருக்கின்றது. எனவே, வடிவால் சிறியவரைக் கண்டு இகழ வேண்டாம்.

1 வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 135, 136 இரண்டும் சேர்த்து எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் பாமோலின் எண்ணெய்
135—

(*வினா எண் 12216—) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமையல் எண்ணெயான பாம் ஆயில் தமிழகத்திற்கு மத்திய அரசு எவ்வளவு ஒதுக்கியுள்ளது ?

(ஆ) கோட்டாவை எவ்வளவு உயர்த்துமாறு மாநில அரசு கோரியுள்ளது ?

(இ) மத்திய அரசின் பதில் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பாமோலின் எண்ணெய் ஒதுக்கீடு ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் தொடங்கி அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் முடிவடையும். 1980–81, 1981–82, 1982–83 எண்ணெய் ஆண்டுகளில் முறையே 43,400, 42,491, 55,530 மெ. டன்களும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஆ) அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் ஒரு முறை ஒரு கிலோ வீதம் வழங்க மாத ஒதுக்கீட்டினை 12,500 மெ. டன்களாக உயர்த்துமாறு இவ்வரசு மத்திய அரசினைக் கோரியுள்ளது.

(இ) எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகமாக உள்ள காலமான நவம்பர் முதல் மார்ச் வரையிலான காலத்தில் குறைவாகவும் ஏப்ரல் முதல் அக்டோபர் வரை அதிகமாகவும் பாமோலின் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது என மைய அரசு பதில் அனுப்பியுள்ளது. இந்த எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

136—

(*வினா எண் 15590)—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சமையல் எண்ணெய் பற்றாக்குறையைப் போக்க தமிழக அரசிடம் ஏதாவது புதிய திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசால் இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய் (பாமோலின்) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. மத்திய அரசின் ஒதுக்கீட்டை அதிகப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

சமையல் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கி அதிக எண்ணெய் உற்பத்தி செய்ய பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாமாலின் எண்ணெயைப் பொறுத்த மட்டில் சமையலுக்கு மிக அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது. ஏற்கெனவே சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த, தேங்காய் எண்ணெய் போன்றவற்றின் விலை தென்னை மர உயரத்திற்கு ஏறி விட்டதால், இந்த எண்ணெயை மக்கள் சமையலுக்கு இப்போது பெரிதும் பயன்படுத்துகிறார்கள். நாமும் இந்த எண்ணெயை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசைப் பொறுத்தமட்டில் அவர்கள் உயர்த்துவதாக தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலில் இருந்து பார்த்தால், முதலில் 43,400, பிறகு 42,491 என்று இருப்பதைப் பார்த்தால், வர வர குறைந்துக் கொண்டே வருகிறதோ என்று தோன்றுகிறது.

ஆகவே, இதில், மத்திய அரசாங்கம் நிச்சயமாக உயர்த்திக் கொடுக்கும் என்கிற வகையில் ஏதாவது கடிதம் எழுதியிருக்கிறதா ? அதிகப்படுத்துவதற்கான வாய்ப்பு உண்டா இல்லையா ?